<u>பத்திரிகைச் செய்தி</u>

டேராடுனில் உள்ள தேசிய இராணுவ கல்லூரியில் 8-ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது. இதற்கு வருகிற 31-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**மாணவர் சேர்க்கை:**

உத்தராஞ்சல் டேராடுனில் உள்ள தேசிய இராணுவ கல்லூரிக்கு 2018-ஆம் ஆண்டு ஜீலை மாதத்துக்கு 8-ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கை நடைபெறுவது தொடர்பாக தகுதியுள்ள மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதற்கு 7-ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் அல்லது 7-ஆம் வகுப்பில் படித்து முடித்த மாணவர்களாக இருக்க வேண்டும். 01.01.2018-ல் $11\frac{1}{2}$ வயதுக்கு குறையாமலும், 13 வயதினை அடையாமலும் இருக்க வேண்டும். அதாவது 02.01.2005-க்கு முன்பு அல்லது 01.07.2006-க்கு பின்னர் பிறந்திருக்க கூடாது. விண்ணப்ப படிவம் மற்றும் விளக்க கையேட்டை பெற பொதுப்பிரிவினர் ரூபாய்.550/-க்கான வரைவோலையை பதிவஞ்சலிலோ அல்லது விரைவு அஞ்சலிலோ அனுப்ப வேண்டும்.

எஸ்சி.எஸ்.டி பிரிவினர் ரூ.505/-க்கான வரைவோலையை பதிவஞ்சலிலோ அல்லது விரைவு அஞ்சலிலோ அனுப்ப வேண்டும். இவற்றை "The Commandant, RIMC, Dehradun, Drawees Branch, (State Bank of India, TEL Bhavan, Dehradun – Bank Code – 01576) Uttarahand" என்ற முகவரியில் பெற வேண்டும். முகவரியானது தட்டச்சு செய்தோ அல்லது தெளிவான எழுத்து மூலமோ ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில் அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் தொடர்பு எண்ணுடன் எழுத வேண்டும். விண்ணப்பங்கள் பெற கடைசி நாள்: 30.03.2017.

RIMC-ல் இருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் பெற தி கமாண்டன்ட், ராஷ்ட்ரிய பாரதிய செய்னா கல்லூரி, ராஷ்ட்ரிய இந்தியன் மிலிட்டரி கல்லூரி, டேராடூன், உத்தராகாண்ட் - 248003 என்ற முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வருகிற 31-ஆம் தேதிக்குள் The Controller of Examination, TNPSC, Chennai-3 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். எழுத்து

தேர்வுகள் 01.06.2017 மற்றும் 02.06.2017 ஆகிய தேதிகளில் நடைபெறும். இது பற்றிய மேலும் விவரங்கள் www.rimc.org என்ற இணையதளத்தில் பார்வையிட்டு கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஓம்/-சஜ்ஜன்சிங் ரா.சவான்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

/உண்மை நகல்/உத்தரவு படி/

மாவட்ட ஆட்சியருக்காக,
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர்(நிலம்),
கன்னியாகுமரி மாவட்டம்.